©
தமிழ்நாடு அரசு
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 25] சென்னை, புதன்கிழமை, ஜூன் 25, 2025
ஆனி 11, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு—2056.

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

### வரைவு அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண்.15, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M1)த் துறை, நாள்: 12 பிப்ரவரி 2025.]*

2009ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) 53ஆம் பிரிவைச் சேர்ந்த (1), (2) ஆகிய உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 17–05–2023 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் III பிரிவு 1(a) இன் 38 முதல் 47 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட (SRO A–19/2023 ஆம் எண் அறிவிக்கையை இதனால் ரத்து செய்கிறார்.

### அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண்.50, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M2)த் துறை, நாள்: 27 மே 2025.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் செய்யக்கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தத்தின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரப்பட்டுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் பின்வரும் வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் மேற்சொன்ன கால அளவான நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை 32 கிண்டி, 47/1–இல் உள்ள திரு.வி.க. தொழிற்பேட்டை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர், வாயிலாக அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு இருபடிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன விதிகளில், 4 ஆம் விதியின், துணை விதி (6) –இல், இரண்டாம் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

“மேலும், பட்டாசு தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கையானது. 1884 ஆம் ஆண்டு வெடிப்பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4 / 1884) மற்றும் 2008 ஆம் ஆண்டு வெடிப்பொருட்கள் விதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் வரம்பு எண்ணிக்கையை விட பதினைந்து விழுக்காடு அதிகமாக இருக்க வேண்டும்."

**K. வீர ராகவ ராவ்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி மொழி பெயர்ப்புத் துறை.*

\

## இயற்கை வளங்கள்

### அறிவிக்கைகள்

*[அரசாணை(நிலை) எண்: 37, இயற்கை வளங்கள் (MMC.1)த் துறை, நாள்: 22 ஏப்ரல் 2025]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின், மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் மேற்கொள்கிறார். அவையாவன

### திருத்தங்கள்

மேற்சொன்னவிதிகளில்,

(1 விதி –20 இன், துணை விதி (2) இன் பகுதி(a)–க்குப் பதிலாக பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது.

(அ) இதுவரை கரடுமுரடான கற்கள் வெட்டி எடுக்கப்படாத குவாரிகளைப் பொருத்தமட்டில், கரடுமுரடான கற்களை வெட்டி எடுப்பதற்கான குவாரிக் குத்தகையின் குறைந்தளவு கால அளவு ஒரு வருடத்திற்குக் குறையாமலும், அத்தகைய குத்தகை வழங்குவதற்கான அதிகளவு காலம் ஐந்து எக்டேர் வரையிலான பரப்பளவிற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு மிகாமலும், ஐந்து எக்டேருக்கு அதிகமாகவும் மற்றும் பத்து எக்டேருக்குக் குறைவாக உள்ள பரப்பளவிற்கு இருபது ஆண்டுகளுக்கு மிகாமலும் மற்றும் பத்து எக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பளவிற்கு முப்பது ஆண்டுகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். மற்ற பகுதிகளைப் பொறுத்தவரையில், கடினமான கற்களுக்கான குத்தகை கால அளவு, ஐந்து எக்டேர் வரையிலான பரப்பளவிற்கு பத்து ஆண்டுகளும், ஐந்து எக்டேருக்கு அதிகமாக ஆனால் பத்து எக்டேருக்குக் குறைவான பரப்பளவிற்கு, பதினைந்து ஆண்டுகளும் பத்து எக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்டபரப்பளவிற்கு இருபத்தைத்து ஆண்டுகளும் இருக்க வேண்டும்.

இருப்பினும், கரடுமுரடான கற்களுக்கு, ஏற்கனவே குறைந்த கால அளவிற்கு குத்தகைக்கு பெற்ற குத்தகைதாரர், இந்த விதியில் வகைச் செய்யப்பட்டுள்ளவாறாக, நீட்டிக்கப்பட்ட கால அளவிற்கு குத்தகையை நீட்டிப்பதற்கு பின் இணைப்பு VI இல் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில், விதி 41 இன் துணை விதி (9) இன் அடிப்படையில் பெறப்பட்ட ஏற்பளிக்கப்பட்ட சுரங்கத் திட்டத்துடன், குத்தகைக் காலம் முடிவடைவதற்கு குறைந்தது 180 நாட்களுக்கு முன்னர் புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநரிடம் விண்ணப்பிக்கலாம்:":

(2) விதி 44 க்குப் பின்னர், பின்வரும் விதி இறுதியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

45. குவாரி குத்தகைகளை ஒருங்கிணைத்தல். (1) மாநில அரசு அல்லது மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர், என குவாரி குத்தகைகளை வழங்கியவர் எவராக இருப்பினும், கனிம வள மேம்பாட்டிற்காகவும், எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும், குத்தகைதாரர் வைத்திருக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அருகருகேயுள்ள குத்தகைகளை ஒருங்கிணைக்க அனுமதிக்கலாம்:

குவாரி குத்தகைகளை ஒருங்கிணைக்க விண்ணப்பிப்பதற்கு முன், 1961 ஆம் ஆண்டு உலோகச் சுரங்க விதிமுறைகளின் (Metallifrrous Mines Regulations, 1961) 111 ஆம் விதிமுறையின் கீழ் சுரங்கங்களின் தலைமை ஆய்வாளரிடமிருந்து முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும்

(2) அத்தகைய ஒருங்கிணைப்புக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், ஏற்பளிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட சுரங்கத் திட்டம் மற்றும் ஒருங்கிணைக்கப்படும் பகுதிகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதியுடன் குவாரி குத்தகையை வழங்கிய அதிகாரியிடம் அளிக்கப்பட வேண்டும்.

(3) அத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட குத்தகையின் கால அளவு, முதலில் காலாவதியாகும் குத்தகையின் கால அளவுடன் முடிவடையும்.".

*[அரசாணை(நிலை) எண்: 40, இயற்கை வளங்கள் (MMC.1)த் துறை, நாள்: 07 மே 2025]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள். 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் மேற்கொள்கிறார். அவையாவன–

### திருத்தங்கள்

(1) மேற்சொன்ன விதிகளில், விதி 8–C–க்குப் பதிலாக, பின்வரும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது,

**“8–C. கிரானைட் உட்பட சிறு கனிமங்கள் மாநில அரசால் வெட்டியெடுக்கப்படுதல் மற்றும் கிரானைட் உட்பட சிறு கனிமங்களுக்கான குவாரி குத்திகையை மாநில அரசுக்கு, சொந்தமான அல்லது மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிறுவனம் அல்லது கழகத்துக்கு வழங்குதல்.–**(1) மேற்சொன்ன விதிகளில் என்ன சொல்லியிருப்பினும், அதனைக் கருதிப்பார்காமல், கிரானைட் உள்ளிட்ட சிறு கனிமங்கள் இருப்பது உறுதிசெய்யப்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரையில், மாநில அரசு தாமாகவே கிரானைட் உள்ளிட்ட சிறு கனிமங்களை வெட்டியெடுப்பதில் ஈடுபடலாம் அல்லது கிரானைட் உள்ளிட்ட சிறு கனிமங்களை வெட்டியெடுப்பதற்கான குத்தகையை மாநில அரசுக்கு சொந்தமான அல்லது மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனம் அல்லது கழகத்திற்கு வழங்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்.

(2) (a) இந்த விதியின் கீழ் கிரானைட் வெட்டி எடுப்பதற்கான குத்தகையை வழங்குவதற்காக மாநில அரசிடம் அளிக்கப்படும் விண்ணப்பம். இந்த விதிகளின் பிற்சேர்க்கை–VII இல் உள்ள படிவத்தில், திரும்பப் பெற இயலாத ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) விண்ணப்பக் கட்டணத்துடனும், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் நேர்வுக்கேற்ப மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலரிடம் அளிக்க வேண்டும்.

(b) கிரானைட் நீங்கலாக ஏனைய சிறு கனிமங்கள் மற்றும் பிற்சேர்க்கை I–B இல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களைப் பொறுத்தவரையில், விண்ணப்பம் இந்த விதிகளுக்கான பிற்சேர்க்கை VII–C இல் உள்ள படிவத்தில், திரும்பர் பெற இயலாத ரூ.1,500/– (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) விண்ணப்பக் கட்டணத்துடனும், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநரிடம் அளிக்கப்பட வேண்டும்.

(c) அந்த விதியின் கீழ் அளிக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பெற்றமைக்கான ஒப்புகைச் சீட்டு, நேர்விற்கேற்ப மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர். அல்லது நேர்விற்கேற்ப மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர், இந்த விதிகளுக்கான பிற்சேர்க்கை IX இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் வழங்க வேண்டும்.

(3) (a) கிரானைட் குவாரி குத்தகை வழங்குவதற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை நேர்விற்கேற்ப, மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர். அவ்விண்ணப்பங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வாயிலாக மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும். நேர்விற்கேற்ப மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலரின் பரிந்துரையுடன் விண்ணப்பம் பெறப்பட்டவுடன், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அவற்றைத் தனது பரிந்துரையுடன் மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரருக்கு குத்தகை வழங்க அல்லது குத்தகை வழங்க மறுக்கும் ஆணையை மாநில அரசு பிறப்பிக்கும்.

(b) கிரானைட் நீங்கலாக ஏனைய சிறு கனிமங்கள் மற்றும் பிற்சேர்க்கை I–B இல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களைப் பொறுத்தவரையில், அத்தகைய கனிமங்கள் தொடர்பான குத்தகையை விண்ணப்பதாரருக்கு வழங்க அல்லது மறுக்கும் ஆணையை புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநர் பிறப்பிப்பார்.

(c) கிரானைட் வெட்டி எடுப்பதற்கான குத்தகை வழங்க மாநில அரசு முடிவு செய்யும் நேர்வில், மாநில அரசு குத்தகைக்கு வழங்கப்படுவதற்காக வரையறுக்கப்பட பகுதியை விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்க வேண்டும். மாநில அரசிடமிருந்து இது தொடர்பாக தகவல் பெறப்பட்டவுடன், விண்ணப்பதாரர் அத்தகைய தகவல் பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது மூன்று மாதங்களுக்கு மிகாத கால அளவான மாநில அரசு அனுமதி வழங்கிய கால அளவிற்குள் ஒப்புதலளிக்கப்பட்ட கனிமங்களை கெட்டிபெடுப்பதற்கான திட்டத்தை அளிக்க வேண்டும்.

(d) கிரானைட் நீங்கலாக ஏனைய சிறு கனிமங்கள் மற்றும் பிற்சேர்க்கை I–B இல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களைப் பொறுத்தவரையில், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநர் குத்தகை வழங்க முடிவு செய்யும் நேர்வில், குத்தகைக்கு வழங்கப்படுவதற்காக வரையறுக்கப்பட்ட பகுதியை புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநர் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்க வேண்டும். புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநரிடமிருந்து இது தொடர்பாக தகவல் கிடைக்கப்பெற்றவுடன், விண்ணப்பதாரர், அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநர் அனுமதி வழங்கிய மூன்று மாதங்களுக்கு மிகாத கால அளவிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கனிமங்களை வெட்டியெடுக்கும் திட்டத்தை அளிக்க வேண்டும்.

(4) கிரானைட் வெட்டியெடுப்பதற்கு குவாரி குத்தகை வழங்கப்படுவதற்கான கால அளவு உயரளவாக முப்பது ஆண்டுகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்:

ஆனால், அத்தகைய குத்தகை வழங்கப்படுவதற்கான குறைந்தபட்ச கால அளவு இருபது ஆண்டுகளுக்குக் குறைவாக இருக்கக்கூடாது.

(5) கிரானைட் நீங்கலாக ஏனைய சிறு கனிமங்கள் மற்றும் பிற்சேர்க்கை I–B இல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்களைப் பொறுத்தவரையில், குவாரி குத்தகை வழங்கக்கூடிய கால அளவானது. இந்த விதிகளின் 20 ஆம் விதியின்படி இருத்தல் வேண்டும்.

(6) (a) குத்தகை வழங்கப்பட்டுள்ள நேர்வில், ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது புவியியல் மற்றும் சுரங்க இயக்குநர் இதற்காக அனுமதிக்கக் கூடிய அத்தகைய கூடுதல் கால அளவிற்குள் இந்த விதிகளின் பிற்சேர்க்கை I–A இல் உள்ள படிவத்தில் உள்ளவாறு குத்தகை ஆவணம் ஒன்று செயல்படுத்தப்பட வேண்டும்.

(b) குத்தகை ஆவணத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னர், பிணை வைப்புத்தொகையாக, கிரானைட்டைப் பொறுத்தவரையில் ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) அல்லது கிரானைட் அல்லாத சிறு கனிமங்களுக்கு ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தொகைக்கான, நேர்விற்கேற்ப மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர் அல்லது புவியியல் மற்றும் சுரங்க உதவி இயக்குநரின் பெயரில் (பதவிப் பெயரில் மட்டுமே) யாதொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட பயனாளிகளின் வங்கிக் கணக்கில் மட்டுமே வரவு வைக்கப்படுவதற்கான குறுக்குக் கோடிட்ட கேட்பு வரைவோலை ஒன்று தொடர்புடைய அலுவரிடம் அளிக்கப்பட வேண்டும்.

குத்தகை ஆவணம் செயல்படுத்தப்படும் நாளிலிருந்து குவாரி குத்தலைக் காலம் தொடங்கும்.

(7) (a) இந்த விதியின் கீழ் கிரானைட் தொடர்பாக வழங்கப்பட்ட குத்தகை இருபது ஆண்டு காலத்திற்கு மிகாத கால அளவிற்குப் புதுப்பிக்கப்படலாம்:

ஆனால், குத்தகை நிபந்தனைகளை நிறைவு செய்து குத்தகைதாரரின் கடந்த கால செயல்பாடுகள் மனநிறைவளிக்கும் வகையில் அமைந்திருப்பதற்குட்பட்டு குத்தகை புதுப்பிக்கப்படும்.

(b) குத்தகைக் காலம் நிறைவடையும் நாளுக்கு குறைந்தது பன்னிரண்டு மாதங்களுக்கு முன்னர். கிரானைட் தொடர்பான குத்தகை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், இந்த விதிகளின் பிற்சேர்க்கை – VII இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் திரும்பப்பெற முடியாத விண்ணப்பக கட்டணம் ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆகியவற்றுடன். தொடர்புடைய மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கக்கப்பட வேண்டும்.

(c) குத்தகைதாரர் கிரானைட் குவாரி குத்தகை புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தை அளிக்கும் போது, புதுப்பித்தல் விண்ணபத்தைத் தாக்கல் செய்யும் நேத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட, கனிமங்களை வெட்டியெடுப்பதற்கான செல்திறனுள்ள திட்டத்துடன் அளிக்க வேண்டும்.

(d) இந்த விதியின் கீழ் உள்ள கிரானைட் குத்தகை வழங்குவதற்கான நிபந்தனைகள் மற்றும் நடைமுறை தகுந்த மாற்றங்களுடன், இந்த விதியின் கீழ் உள்ள குத்தகை புதுப்பித்தலுக்கும் பொருந்தும்.

(8) குத்தகைதாரர். இந்த விதிகளின் பிற்சேர்க்கை – || இல் அவ்வப்போது வரையறுக்கப்பட்ட வீதத்தில் பகுதி மதிப்பீடு மட்டுமல்லாது. உரிமக் கட்டணம் அல்லது தெண்டக் குத்தகை இவற்றில் எது அதிகமானதோ அத்தொகையை செலுத்த வேண்டும். குத்தகைதாரர் அவ்வப்போது மாநில அரசால் விதிக்கப்படும். பிற வரிகளையும் செலுத்த வேண்டும்.

(9) இது தொடர்பாக இந்த விதிகளில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகளுக்குட்பட்டு நேர்விற்கேற்ப மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநர், அல்லது மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உதவி இயக்குநரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஏனைய யாதொரு அதிகாரியிடமிருந்து போக்குவரத்து அனுமதிகள் மற்றும் அனுப்புகைச் சீட்டுகளைப் பெற்ற பிறகு, குத்தகைதாரர் குத்தகைப் பகுதியிலிருந்து கனிமத்தை வேறிடத்திற்கு எடுத்து செல்ல வேண்டும்.

(10) குத்தகைதாரர். தொழிலாளர்களின் முறையான பாதுகாப்பு, கனிமங்களின் பாதுகாப்பு மற்றும் அந்தப் பகுதியின் சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, திறம்பட. அறிவியல்பூர்வமான மற்றும் திட்டமிடப்பட்ட முறையில் கற்களை வெட்டியெடுக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

(11) துணை விதி (10) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கங்களுக்காகவும் அல்லது இச்சட்டத்தில் அல்லது இவ்விதிகளில் அல்லது மத்திய அரசு அல்லது மாநில அரசு உருவாக்கிய ஏனைய யாதொரு சட்டத்தில் அல்லது விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள குத்தகை தொடர்பான நிபந்தனைகள் அல்லது விதித்துறைகளைச் செயல்படுத்துவதற்கு அல்லது பின்பற்றுவதற்குத் தேவையான ஏனைய யாதொரு நோக்கத்திற்காகவும், நேர்விற்கேற்ப, மாநில அரசு மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அல்லது மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் உதவி இயக்குநரின் ஆகியோரால் அதிகாரம் வழங்கப்பட்ட யாதொரு அலுவலரும் அந்தப் பகுதிக்குள் நுழைந்து ஆய்வு செய்ய குத்தகைதாரர் அனுமதிக்க வேண்டும்.

(12) கிரானைட் வெட்டியெடுப்பதற்காக குத்தகைக்கு விடப்பட்ட பகுதியிலிருந்து உருவாகும் கிரானைட் கழிவுகள். சாலை உருவாக்குவதற்கான பொருளாகவோ அல்லது உற்பத்தி செய்யப்பட்ட மணல் உற்பத்திக்கான மூலப்பொருளாகவோ அல்லது ஏனைய யாதொரு நோக்கத்திற்காக மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் விற்பனை செய்யப்படலாம். கிரானைட் கழிவுகளுக்கான உரிமைக் கட்டண வீதம், டன் ஒன்றுக்கு ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) ஆக இருக்கும்."

(2) விதி 41 இல்,

(i) துணை விதி (1) இல், ''8'' என்ற சொற்றொடருக்குப் பின்னர். "8–C'' என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ii) துணை விழி (2) இல் "மாவட்ட ஆட்சியர்" என்ற சொற்றொடருக்கும். 2 பின்னர். "அல்லது நேர்விற்கேற்ப புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும் "கிரானைட்" என்ற சொற்றொடருக்குப் பின்னர். "மற்றும் பிற்சேர்க்கை–I–B–இல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்கள்" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்;

(iii) துணை விதி 10 இல், –

(a) பகுதி (ii) இல், ''புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடருக்குப் பின்னர். கொள்ளப்பட வேண்டும்; நேர்விற்கேற்ப" என்ற சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்

(b) பகுதிகள் (iii), (iv), (v) மற்றும் (vi) ஆகியவை விட்டுவிடப்பட வேண்டும்;

(3) விதி 42 இல் துணை விதி (iii) விட்டுவிடப்பட வேண்டும்.

(4) பிற்சேர்க்கை I–A–ல். மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது மாநில அரசின் கட்டுபாட்டிலுள்ள மாநில அரசு நிறுவனம் அல்லது கழகம் கிரானைட் வெட்டியெடுப்பதற்கும் அவற்றை எடுத்துச் செல்வதற்குமான குத்தகைப் படிவம்" என்ற படிவத்தின் தலைப்புக்குப் பதிலாக, பின்வரும் தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

''மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது மாநில அரசின் கட்டுபாட்டிலுள்ள அரசு நிறுவனம் அல்லது கழகம் கிரானைட் மற்றும் ஏனைய சிறு கனிமங்களை வெட்டியெடுப்பதற்கும் அவற்றைக் கொண்டு செல்வதற்குமான குத்தகைப் படிவம்"

(5) பிற்சேர்க்கை VII B –க்குப் பின்னர், பின்வரும் பிற்சேர்க்கை சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

## "பிற்சேர்க்கை -VII-C"

(விதி 8 – C (2) (b) – ஐக் காண்க)

## கிரானைட் மற்றும் பிற்சேர்க்கை I-B இல் குறிப்பிடப்பட்டுள்ள கனிமங்கள் நீங்கலாக ஏனைய சிறு கனிமங்கள் குறித்த நேர்வில், குவாரி குத்தகை வழங்குவதற்கான விண்ணப்பம்

**(மூன்று படிகளில் அளிக்கப்பட வேண்டும்)**

20––ஆம் ஆண்டு––––திங்கள்––ஆம் நாள்

பெறுநர்
உதவி இயக்குநர்.
புவியியல் மற்றும் சுரங்கத்துறை.
–––––––––––––மாவட்டம்

ஐயா,

I. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின் 8–C ஆம் விதிகளின் கீழ் குவாரி குத்தகை எனக்கு / எங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென நான் / நாங்கள் கேட்டுக்கொள்கிறேன் / கேட்டுக்கொள்கிறோம்.

II. புதிதாக குவாரி குத்தகை பெறுவதற்கான திரும்பப் பெற இயலாத விண்ணப்ப கட்டணமான ரூ.1500/– (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டுமே) தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது.–

"0853 இரும்பு அல்லாத கனிமப் பொருட்களை வெட்டியெடுத்தல் மற்றும் உலோகவியல் தொழிற்சாலைகள் 102 கனிம சலுகைக் கட்டணங்கள், வாடகை, உரிமைத் தொகைகள் – AH. குவாரிகள் மற்றும் கனிமங்கள் துறை த. தொ. கு. எண் 0858–00–102–AH–22705."

III. தேவைப்படும் விவரங்கள் பின்வருமாறு–

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரருடைய நிறுவனத்தின் பெயர் மற்றும் முழு முகவரி: | |
| 2. | இயக்குநர்கள் / கூட்டாண்மையர்கள் / உறுப்பினர்களின் பெயர் மற்றும் அவர்களின் நாட்டினம் (ஆவணச் சான்றுகள் அளிக்கப்பட வேண்டும்): | |
| 3. | விண்ணப்பதாரரின் தொழில் அல்லது தொழிலின் தன்மை: | |
| 4. | குத்தகை புதிதாக வழங்குவதற்கான விண்ணப்பமா? | |
| 5. | திரும்ப பெறமுடியாத விண்ணப்பக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட விவரங்கள் | |
| 6. | விண்ணப்பதாரர் அண்மைக்கால வருமான வரி இசைவுச் சான்றிதழ் அளித்துள்ளாரா? இல்லையெனில், விண்ணப்பதாரர் நாளது வரையில் வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்துள்ளதாக உறுதிமொழி ஆவணம் ஒன்றை அளித்துள்ளாரா | |
| 7. | (a) அவருக்கென மதிப்பீடு செய்யப்பட்ட வருமான வரியைச் செலுத்தியுள்ளாரா? மற்றும் | |
| | (b) 1961 ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தில் (மத்தியச் சட்டம் 43/1961) வரையறுக்கப்பட்டுள்ளவாறு தன் மதிப்பீட்டின் அடிப்படையில் வருமான வரி செலுத்தியுள்ளாரா: | |
| | (c) விண்ணப்பிக்கப்பட்டுள்ள கனிமத்தின் பெயர்: | |
| 8. | குவாரி குத்தகைக்கான / குத்தகை புதுப்பிப்பதற்கான கால அளவு: | |
| 9. | விண்ணப்பிக்கப்பட்டுள்ள பகுதியின் மொத்த பரப்பளவு: | |

(10) விண்ணப்பிக்கப்பட்டுள்ள பரப்பளவு தொடர்பான விவரங்கள்:

| மாவட்டம் | வட்டம் | கிராமம் | நில அளவை எண் | பரப்பளவு (எக்டேர்களில்) | வகைப்பாடு |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் | | | | |

| | | |
|---|---|---|
| 11. | விண்ணப்பிக்கப்பட்டுள்ள பகுதியைத் தெரிவிக்கும் கள அளவைப் புத்தக வரைபடம் மற்றும் நில வரைபடம் இணைக்கப்பட்டுள்ளனவா? | |
| 12. | விண்ணப்பதாரரின் நிதி ஆதாரங்கள்: (அண்மைக்கால மூலதன தகுதிச் சான்றிதழின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |

| | | |
|---|---|---|
| 13. | தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பகுதிகளில் கனிமவள ஆய்வு உரிமம் மற்றும் குவாரி குத்தகையின் கீழ் ஏற்கெனவே அடங்கியுள்ள பகுதிகள் மற்றும் ஏற்கெனவே விண்ணப்பிக்கப்பட்டு ஆனால் குத்தகை உரிமை வழங்கப்படாத பகுதிகள் மற்றும் தற்போது விண்ணப்பிக்கப்படும் பகுதிகள் போன்றவற்றைக் குறிப்பிடுகிற உறுதிமொழி ஆவணம். | |
| 14. | (a) பிற்சேர்க்கை VIII –இன்படி கனிமங்களை வெட்டியெடுப்பது தொடர்பாக நிலுவை ஏதுமில்லை என்பதற்கான அண்மைக்காலச் சான்றிதழ் | |
| | (b) விண்ணப்பிக்கும் நாளன்று, விண்ணப்பதாரரிடம் கனிமவள | |
| | ஆய்வு உரிமம் மற்றும் கற்களை வெட்டியெடுப்பதற்கான குத்தகை உரிமை இல்லையெனில், இந்த நோக்கத்திற்காக உறுதிமொழி ஆவணம் ஒன்று அளிக்கப்பட்டுள்ளதா? | |
| 15. | விண்ணப்பதாரர், பணிகளை மேற்பார்வையிட விழைந்தால், கனிமவள ஆய்வு அல்லது கனிமங்களை வெட்டியெடுத்தல் தொடர்பான அவரது முந்தைய அனுபவம் குறித்து விவரிக்கப்பட வேண்டும். அவர் மேலாளர் ஒருவரை நியமிக்க விழைந்தால், அவரின் கல்வித் தகுதி மற்றும் அவரது முந்தைய அனுபவம் குறித்து குறிப்பிடுவதோடு, அவரது இசைவு கடிதமும் அளிக்கப்பட வேண்டும்: | |
| 16. | குத்தகை நிபந்தனைகளை மீறியதற்காக குத்தகைதாரர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா அல்லது தொடங்கப்பட்டதா<br><br>ஆம் எனில், அதன் விவரங்கள் மற்றும் அதற்கான ஆவணங்களை இணைத்து அளிக்கவும்: | |
| 17. | விண்ணப்பதாரர் அளிக்க விரும்பும் ஏனைய யாதொரு விவரங்கள் | |

மேலே அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியென்றும், மேலும் அரசு கோரும் ஏனைய யாதொரு விவரங்கள் மற்றும் பிணை வைப்புத்தொகையை அளிக்கத் தயாராக உள்ளோம் என்றும் நான் / நாங்கள் உறுதியளிக்கிறோம்.

[*பொருந்தாதவற்றை அடித்துவிடவும்]

தங்கள் உண்மையுள்ள,

நாள்:

(விண்ணப்பதாரரின் கையொப்பம்).".

இடம்:

*[அரசாணை(நிலை) எண்: 41, இயற்கை வளங்கள் (MMB.1)த் துறை, நாள்: 07 மே 2025]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். அவையாவன:

## திருத்தங்கள்

மேற்சொன்னவிதிகளில்,

(1) விதி–8 இல், துணை விதி (18) இல் பகுதி (m) – க்குப் பின்னர் பின்வரும் பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது

(ma) இந்த விதிகளின் பின் இணைப்பு II இல் வரையறுக்கப்பட்ட வீதத்தில் உரிமைக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், இந்த விதிகளின் 35–B ஆம் விதியில் வரையறுக்கப்பட்ட வீதத்தில் பசுமை நிதியத்திற்கும், இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட தொடர்புடைய விதிகளில் அரசு வரையறுத்த வீதத்தில் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிக்கும், பங்களிப்புகளை வழங்கிய பின்னர், மாவட்ட ஆட்சியரின் அனுமதியைப் பெறாமல் கிரானைட் கழிவுகளை குத்தகைதாரர் அகற்றக்கூடாது.":

(2) விதி 19–A இல், துணை விதி (20) க்குப் பின்னர், பின்வரும் துணை விதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது

"(21) இந்த விதிகளின் பின் இணைப்பு II இல் வரையறுக்கப்பட்ட வீதத்தில் உரிமைக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், இந்த விதிகளின் 35–B ஆம் விதியில் வரையறுக்கப்பட்ட வீதத்தில் பசுமை நிதியத்திற்கும் இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட தொடர்புடைய விதிகளில் அரசு வரையறுத்த வீதத்தில் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிக்கும், பங்களிப்புகளை வழங்கிய பின்னர், மாவட்ட ஆட்சியரின் அனுமதியைப் பெறாமல் கிரானைட் கழிவுகளை குத்தகைதாரர் அகற்றக்கூடாது.":

(3) விதி 45 க்குப் பின்னர். இறுதியில் பின்வரும் விதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"46. முந்தைய விதி 8–A இன் கீழ் கிரானைட் குத்தகைக்கு அனுமதியளிக்கப்பட்ட குவாரிகளிலிருந்து கிரானைட் கழிவுகளை அகற்றுதல். (1) குத்தகைதாரர், முந்தைய விதி 8–A இன் கீழ் குத்தகைக்கு அனுமதியளிக்கப்பட்ட அரசு நிலத்திலிருந்து கிரானைட் கழிவுகளை அகற்றுவதற்கு கருதுவாராயின், குத்தகை தற்போதும் நடைமுறையில் இருப்பின், இந்த விதிகளின் பின் இணைப்பு–II இல் வரையறுக்கப்பட்ட வீதத்தில் உரிமைக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் இந்த விதிகளின் 35–B ஆம் விதியில் வரையறுக்கப்பட்ட வீதத்தில் பசுமை நிதியத்திற்கும், இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட தொடர்புடைய விதிகளில்

அரசு வரையறுத்த வீதத்தில் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிக்கும், பங்களிப்புகளை வழங்கிய பின்னர், அவர் மாவட்ட ஆட்சியரின் அனுமதியைப் பெற வேண்டும்

(2) முந்தைய விதி 8–A கீழ் கிரானைட் குத்தகைக்கு அனுமதியளிக்கப்பட்டு, குத்தகை காலாவதியான அரசு நிலத்திலிருந்து, அவ்வப்போது அரசால் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளின்படி, கிரானைட் கழிவுகளை அரசு ஏலம் விடலாம்

குத்தகைக்கான கிரானைட் நிலத்தை ஏலத்தில் பெற்ற ஏலதாரர். இந்த விதிகளின் பின் இணைப்பு–II இல் வரையறுக்கப்பட்ட வீதத்தில் உரிமைக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், இந்த விதிகளின் 35–B ஆம் விதியில் வரையறுக்கப்பட்ட வீதத்தில் பசுமை நிதியத்திற்கும், இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட தொடர்புடைய விதிகளில் அரசு வரையறுத்த வீதத்தில் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிக்கும், பங்களிப்புகளை வழங்கிய பின்னர் மாவட்ட ஆட்சியரின் அனுமதியுடன் கிரானைட் கழிவுகளை அகற்ற வேண்டும்.

**K. பணீந்திர ரெட்டி,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.(முகூபொ)*

(தமிழாக்கம்)

**ந. அருள்**
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி மொழி பெயர்ப்புத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.